

# புனித மரியன்னை பேராலயம்

**மேலப்புதூர், திருச்சி**



## தவக்காலச் சிறப்பு நிகழ்வுகள் - 2021



***அன்புக்குரியவர்களே,***

பிப்ரவரி 17-ம் தேதி திருநீற்றுப் புதனோடு தவக்காலத்தில் அடியெடுத்து வைக்கிறோம். கடவுளின் அருள்பெருக்கின் காலம் இது. அவரது பேரன்பிலும் பேரிரக்கத்திலும் நம்பிக்கை கொண்டு அவரை நோக்கி திரும்பி வருவோம்; திருந்தி வருவோம். அதிக நேரம் ஒதுக்கி செபிப்போம். அடிக்கடி திருப்பலியில் பங்கெடுப்போம். உண்ணா நோன்பிருந்து நம்மைப் பக்குவப்படுத்துவோம். ஏழைகளுக்கு உதவுவோம். நம் வாழ்வை நல்வழிப்படுத்துவோம். தவறான, பிழையான பழக்கவழக்கங்களிலிருந்து விடுதலைப் பெறுவோம். பங்கில் நடைபெறும் அனைத்து தவக்கால பக்தி முயற்சிகளிலும் பிறரன்புச் செயல்பாடுகளிலும் குடும்பமாய் கலந்துகொண்டு நம்மையே புதுப்பிப்போம்.

ஆசியுடன்,

**பேராலயப் பங்குப்பணியாளர்கள்**

## ஓர் அன்பு வேண்டுகோள்!

**நம் பங்கில் உள்ள 67 வயதான, ஏழை நோயாளிகளுக்கு மாதம் ரூபாய் 500/- உதவித் தொகையாக மரியாயின் சேனையினர் மூலமாக வீடு தேடி கொடுத்து வருகிறோம். தாராள உள்ளம் கொண்ட நம் பங்கிலுள்ள சில குடும்பங்களின் மாதாந்திர நன்கொடையாலும், பங்கின் நிதி மூலமும் இப்பணியைச் செய்கிறோம். இன்னும் நிறைய பேருக்கு உதவ வேண்டியிருக்கிறது. குறைந்தது மொத்தமாக நூறு பேருக்காவது மாதந்தோறும் கொடுக்க விரும்புகிறோம். உங்களால் இயன்றவாறு ஒருவருக்கோ, கூடுதலாக பலருக்கோ ரூபாய் 500/- வீதம் கொடுக்க முன்வருமாறு அன்புடன் அழைக்கிறோம். சின்னஞ்சிறிய தன் சகோதர சகோதரிகளுக்கு நாம் செய்வதை தனக்கே செய்ததாக கருதுபவர் நம் கடவுள்.**

**17.02.2021** **திருநீற்றுப் புதன்**



திருப்பலி நேரங்கள் : காலை 5.00 மணி, காலை 6.30 மணி & மாலை 6.15 மணி

**இன்று சுத்தபோசனம், ஒருசந்தி அனுசரிக்க வேண்டும்.**

**பேராலயத்தில் திருச்சிலுவைப்பாதையும் திருப்பலியும்**

**(வெள்ளிக் கிழமைகளில் : மாலை 6.15 மணி – திருப்பலி, மாலை 7.00 மணி – திருச்சிலுவைப்பாதை)**

**19.02.2021** **தவக்கால முதல் வெள்ளி**

**சிலுவைப்பாதையை வழிநடத்துவோர் :** புனித அன்னை தெரசா அன்பியம், புனித அருளானந்தர் அன்பியம், புனித சிறுமலர் அன்பியம், புனித செசிலியா அன்பியம், அடைக்கலமாதா அன்பியம் (கூனிபஜார்), FMM அருள்சகோதரிகள், மரியகம் அருள்சகோதரிகள்.

**26.02.2021** **தவக்கால இரண்டாம் வெள்ளி**

**சிலுவைப்பாதையை வழிநடத்துவோர் :** திருஇருதய ஆண்டவர் அன்பியம், புனித ஆசீர்வாதப்பர் அன்பியம், புனித வளன் அன்பியம், புனித அந்தோணியார் அன்பியம் (மார்சிங்பேட்டை), புனித லூர்தன்னை அன்பியம், புனித வின்செண்ட் தே பவுல் சபையினர், மாதா இருதய சபை அருள்சகோதரிகள்

**05.03.2021** **தவக்கால மூன்றாம் வெள்ளி**

**சிலுவைப்பாதையை வழிநடத்துவோர் :** புனித மத்தேயு கபிரியேல் அன்பியம், சகாயமாதா அன்பியம், புனித ஆரோக்கிய அன்னை அன்பியம், புனித பவுல் அன்பியம், குழந்தை இயேசு அன்பியம், மரியாயின் சேனை, திருச்சிலுவை சபை அருள்சகோதரிகள்

**12.03.2021** **தவக்கால நான்காம் வெள்ளி**

**சிலுவைப்பாதையை வழிநடத்துவோர் :** புனித சந்தியாகப்பர் அன்பியம், புனித பிரான்சிஸ் சேவியர் அன்பியம், புனித மரியம் தெரசா அன்பியம், புனித செபஸ்தியார் அன்பியம் (கெம்ஸ்டவுன்), புனித அடைக்கலமாதா அன்பியம் (மரக்கடை), புனித அன்னாள் சபை அருள்சகோதரிகள், பலிபீட சிறார்கள்.

**19.03.2021** **தவக்கால ஐந்தாம் வெள்ளி**

**சிலுவைப்பாதையை வழிநடத்துவோர் :** புனித மோட்சராக்கினி மாதா அன்பியம், புனித பர்னபா அன்பியம், புனித அமலோற்பவ மாதா அன்பியம், புனித செல்வநாயகி மாதா அன்பியம், புனித மரியன்னை அன்பியம், மரியின் ஊழியர் சபை அருள்சகோதரிகள், மறைக்கல்வி மாணாக்கர் மற்றும் ஆசிரியர்கள்

**26.03.2021** **தவக்கால ஆறாம் வெள்ளி**

**சிலுவைப்பாதையை வழிநடத்துவோர் :** புனித ஜெஸ்டின் அன்பியம், புனித அந்தோணியார் அன்பியம் (கூனிபஜார்), புனித மலைமாதா அன்பியம், புனித செபஸ்தியார் அன்பியம் (கூனிபஜார்), புனித சவேரியார் அன்பியம், புனித தாமஸ் அருள்சகோதரிகள், இளையோர் இயக்கம்.

## கிளைப்பங்கு ஆலயங்களில் திருச்சிலுவைப்பாதையும் திருப்பலியும்

**(செவ்வாய்க் கிழமைகளில் – நேரம் : மாலை 06.15 மணி)**

23.02.2021 புனித மோட்ச ராக்கினி அன்னை ஆலயம், பூந்தோட்டம்

02.03.2021 புனித அந்தோணியார் ஆலயம், மார்சிங்பேட்டை

09.03.2021 புனித அந்தோணியார் ஆலயம், புனித சவேரியார் ஆலயம், புனித செபஸ்தியார் ஆலயம், புனித அடைக்கல அன்னை ஆலயம், கூனிபஜார்

16.03.2021 புனித சவேரியார் ஆலயம், புனித செபஸ்தியார் ஆலயம், புனித அடைக்கல அன்னை ஆலயம், கெம்ஸ்டவுன்

23.03.2021 புனித செல்வ நாயகி அன்னை ஆலயம், ஆலம் தெரு

## தவக்காலச் சிறப்பு நிகழ்வுகள்

28.02.2021 **மறைக்கல்வி மாணாக்கருக்கான சிறப்பு தவக்காலத் தியானம்**
ஞாயிறு நேரம் : காலை 8.30 மணி முதல் 12.00 மணி வரை
(காலை உணவு வழங்கப்படும்)
வழிநடத்துபவர் : அருள்பணி. **லியோ மெல்கியூர் பாபு**, தாளாளர்,
புனித தோமையார் மேல்நிலைப்பள்ளி, நாசரேத்.



05.03.2021 **முதியோர் மற்றும் நோயுற்றோருக்கான சிறப்புத் திருப்பலி**
வெள்ளி (நோயில்பூசுதல் அருளடையாளம் வழங்கப்படும்)
நேரம் : காலை 10 மணி

13,14.03.2021 **தவக்காலத் தியானம்**
நேரம் : சனிக்கிழமை மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை
ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை
(மதிய உணவு வழங்கப்படும்)

20.03.2021 **அருங்கொடை முழு இரவு செப வழிபாடு**
சனி நேரம் : இரவு 10.00 மணி முதல் காலை 4.00 மணி வரை
வழிநடத்துபவர் : அருள்பணி. **ஆல்பர்ட்**, இயக்குநர், அருங்கொடை இல்லம், திருச்சி.

24.03.2021 **தவக்கால சிற்றூர் சந்திப்பு**
புதன் லூர்து நகர் பங்கின் அரசங்குடி மற்றும் விளாங்குடி கிராமங்கள்
நேரம் : மாலை 4.30 மணி

**திருநீற்றுப்புதன் முதல் புனித வார புதன் வரை ஒவ்வொரு நாளும் காலைத் திருப்பலி மற்றும் மாலை திருப்பலிக்கு பின் பேராலயத்தில் சிறு சிலுவைப்பாதை நடைபெறும்.**

**ஒப்புரவு**

**தவக்காலத்தின் எல்லா வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும்**

**நேரம் : மாலை 6.00 மணி முதல் 7.30 மணி வரை**





# புனித வார திருநிகழ்வுகள்

**28.03.2021** **ஆண்டவர் இயேசுவின் பாடுகளின் குருத்து ஞாயிறு**

திருப்பலி காலை 6.30 மணி

(குருத்தோலை பவனி காலை 6.30 மணிக்கு

புனித பிலோமினாள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் தொடங்கும்)

அன்று காலை 5.00 மணி, காலை 8.30 மணி திருப்பலிகள் நடைபெறாது.

மாலை 5.00 மணி, மற்றும் மாலை 6.00 மணி திருப்பலிகள் நடைபெறும்.

தென்னைமரம் வைத்திருப்போர் குருத்தோலைகள் கொடுத்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**31.03.2021** **ஒப்புரவு வழிபாடு (புதன் மாலை)**



**01.04.2021** **புனித வியாழன்**

காலை திருப்பலி நடைபெறாது. மாலை 6.00 மணிக்கு பேராலய வளாகத்தில் புனித வியாழன் சடங்குகளும் திருப்பலியும்  நடைபெறும். தொடர்ந்து நள்ளிரவு வரை நற்கருணை ஆராதனை நடைபெறும்.

**02.04.2021** **புனித வெள்ளி**

காலை 5.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நற்கருணை ஆராதனை நடைபெறும்.

மாலை 6.00 மணிக்கு புனித வெள்ளி திருச்சடங்குகள் ஆரம்பமாகும்.

**இன்று சுத்தபோசனம், ஒருசந்தி அனுசரிக்க வேண்டும்.**



**இரத்ததான முகாம் :**

**நேரம் : காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணிவரை**


**இடம் : பேராலயத்தின் கீழ்தளம்**

பொறுப்பு : பேராலய இளையோர் இயக்கத்தினர்



**03.04.2021** **புனித சனி**

இரவு 11.00 மணிக்கு இயேசுவின் உயிர்ப்பு பெருவிழா நள்ளிரவு வழிபாடுகள் தொடங்கும்.



**04.04.2021** **இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா**

திருப்பலி நேரங்கள் : காலை 6.30 மணி மற்றும் 8.30 மணி

மாலை 6.00 மணிக்கு **நற்கருணை ஆசீர்** நடைபெறும்.

## அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா நல்வாழ்த்துகள்



*St. Joseph's Institute of Printing, Trichy - 1. Ph.: 2411788*